RNI No. PONBIL/2021/82208

Email: thillaimaildaily@gmail.com

THILLAI MAIL

# தில்லை மெயில்

மலர் : 2 இதழ் :350
VOLUME: 2 ISSUE: 350

தினசரி காலை நாளிதழ்
8 பக்கம் ரூ.500 காசு

புதுச்சேரி (4-6-2023) ஞாயிற்றுக்கிழமை
PUDUCHERRY (4-6-2023) SUNDAY

பத்திரிகை செய்தி மற்றும் விளம்பரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
9442634795




## உலக சுற்றுச்சூழல் தினத்தில் மாங்குரோஸ் காட்டில் இருந்து 100 கிலோ பிளாஸ்டிக் அகற்றம்



புதுச்சேரி, ஜூன் 4–

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு புதுச்சேரி அரசு வனத்துறை, சுற்றுலாத் துறை, சுற்றுச்சூழல் மற்றும் அறிவியல் தொழில் நுட்பத்துறை இணைந்து ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி நேற்று புதுச்சேரி முருங்கப்பாக்கம் கைவினை கண்காட்சியம் அருகில் நடைபெற்றது.

இதில் மாங்குரோஸ் காட்டில் சிதறி கிடந்த பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் பணியை அரியாங்குப்பம் பாஸ்கர் (எ) தட்சிணாமூர்த்தி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் துறை சார்ந்த அரசு அதிகாரிகள், சமூக அமைப்பு தன்னார்வளர்களுடன் பூரணாங்குப்பம் தனசுந்தராம்பாள் சாரி டெபுள் சொசைட்டி தன்னார்வலர்கள் 15 நபர்கள் கலந்து கொண்டனர். இதில் சுமார் 100 கிலோவிற்கு அதிகமாக பிளாஸ்டிக் கழிவுகள் மாங்குரோஸ் காடுகளில் இருந்து தன்னார்வளர்களால் அகற்றப்பட்டது.